## தொழில் வளம் மிகுந்த மாநிலமாக மேலும் வளர்ச்சி பெற - குற்ற நடவடிக்கைகளைத் தடுத்திட - தொடர்ந்து

# தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ - அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வீர்!

## மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, செப். 28 -**

**சென்னை - தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (26.9.2023), மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டத்திற்குத் தலைமையேற்று உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "தமிழ்நாடு தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழவும், தொழில் வளம் மிகுந்த மாநிலமாக மேலும் வளர்ச்சி பெறவும், குற்ற நிகழ்வுகளைத் தடுத்திடவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.09.2023) தலைமைச் செயலகத்தில், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது:

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாநிலம் முழுவதும் நிகழ்ந்த பல்வேறு வகையான சட்டம்ஒழுங்குப்பிரச்சினைகள் தொடர்பாக கடந்த ஆண்டு ஏற்பட்ட நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் கூறி இருக்கிறீர்கள்.

தமிழ்நாட்டில் அடுத்த ஏழு, எட்டு மாதங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்தக் காலகட்டத்தில் சில முக்கியமான நினைவு நாட்கள் மற்றும் மத ரீதியான திருவிழாக்கள் நடைபெற உள்ளன.

அதேபோல், அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. ஆகையால், இந்தக் காலகட்டத்தில் மாநிலத்தில் சட்டம்ஒழுங்குப் பிரச்சனை உருவாகாமல் மிக மிகக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

இதற்காக, காவல்துறையில் உள்ள ஆளிநர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை ஒவ்வொரு நிகழ்வையும் உன்னிப்பாகக் கவனித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் – ஆரம்பத்திலேயே நடவடிக்கை!**

அதேபோல், ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள நுண்ணறிவுப் பிரிவு காவல் ஆய்வாளர்கள், கிடைக்கப்பெறும் தகவல்களை நன்கு ஆராய்ந்து பகுப்பாய்வு செய்து உடனுக்குடன் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, நுண்ணறிவுப் பிரிவு அலுவலர்களும் விழிப்புடன் இருந்து தகவல்களை உடனுக்குடன் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப்பிரிவு அலுவலர்களுக்கு வழங்கி, எந்த ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சனையும் ஏற்படா வண்ணம் ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்க உறுதுணையாக இருக்க வேண்டும்.

அதேபோல், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்களுடனும் ஒருங்கிணைந்து பணியாற்றினால், காவல் துறையின், பணித்திறன் பன்மடங்கு மேம்படும்.

**கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குற்றங்கள் குறைவு!**

கடந்த ஒரு மாத காலமாக சில பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் தமிழ்நாட்டில் குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்பதைப் போன்ற தோற்றத்தை உருவாக்கி வருகின்றன. புள்ளி விவரங்களை ஆய்வு செய்து பார்த்தால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

ஆனால் சில ஊடகங்களில் இது போன்ற செய்திகள் சித்தரிக்கப்படுவதால் மக்களிடையே மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு குறித்த தவறான கருத்து ஏற்படக்கூடும்.

இதனைத் தவிர்க்க, காவல் துறையின் மாவட்ட அலுவலர்கள், ஊடகங்களுடன் சரியான தகவல்களை அவ்வப்போது பகிர்ந்து கொள்வதுடன், குற்ற வாளிகளைக் கண்டுபிடித்து, கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். அதனையும், ஊடகங்களுக்கு தெரியப்படுத்திவர வேண்டும்.

இதுதவிர, முக்கிய நிகழ்வுகளில் சரியான தகவல்களை பத்திரிகைகள் வாயிலாக மக்கள் அறியும் வண்



ணம் ஊடகங்களில் அவ்வப்போது பத்திரிகை யாளர் சந்திப்பின் மூலம் காவல்துறை இயக்குநர் தெரியப்படுத்துவதும் நல்ல பலனை அளிக்கும்.

**பெண்கள் – குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!**

நமது அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் மீது மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தால் மட்டுமே அவர்களின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். ஆகையால் பள்ளி, கல்லூரிகள் மற்றும் பெண்கள் அதிகம் கூடும் இதர இடங்களில் சிறப்பு ரோந்துப் படைகள் மூலம் கண்காணித்து தவறு செய்பவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும், அடிக்கடி குற்றம் நிகழும் இடங்களின் புள்ளிவிவரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தும் அறிவியல்பூர்வமாக காவல் துறை செயல்பட வேண்டும்.

அடுத்து, நான் மிக முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது, பாலியல் ரீதியாகக் குழந்தைகளைத் துன்புறுத்து பவர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இத்தகைய குற்றவாளிகள் மீது போக்சோ சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிக்கைத் தாக்கல் செய்து தண்டனை பெற்றுத் தருவதை உறுதி செய்ய வேண்டும்.

போக்சோ சட்டத்தில் நடவடிக்கை எடுக்க புகார் அளிக்க வரும், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தனி அக்கறையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்பட்டு அவர்களுடைய குழந்தையின் பெயர், அடையாளம் ஆகியவை காக்கப்பட வேண்டும்.

போக்சோ சட்டம் குறித்து கல்லூரிகள் மற்றும் பள்ளிகளுக்குக் காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் சென்று குழந்தைகள் மற்றும் பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

போதைப் பொருட்களை உட்கொள்வதால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும், அதேபோல் கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் விற்பவர்கள் பற்றிய தகவல்களை காவல்துறைக்குத் தெரியப்படுத்த அவசரகால உதவி எண்கள் / வாட்ஸ்அப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**கள்ளச்சாராய விற்பனை குறைந்துள்ளது!**

கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனையைத் தடுப்பதற்கான பல்வேறு முயற்சிகளை மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் இணைந்து மேற்கொண்டதால் கள்ளச்சாராய விற்பனை குறைந்துள்ளது என்று அறிகிறேன். இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

மலைப்பகுதிகள் மற்றும் எல்லை மாவட்டங்களை தீவிரமாகக் கண்காணித்து கஞ்சா பயிரிடுதல் மற்றும் போதைப் பொருட்கள் கடத்தலைத் தடுக்க அனைத்து நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

**சமூக ஊடகப் பதிவுகளை தீவிரமாகக் கண்காணித்திடுவீர்!**

சட்டம்ஒழுங்குப் பிரச்சனை சில சமயங்களில், சில சமூக ஊடகச் செய்திகளால் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, சமூக ஊடகப் பதிவுகளை தீவிரமாகக் கண்காணித்து அவற்றில் சாதி, மத ரீதியான வன்மங்களைப் பரப்பும் நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்து துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல் ஆளிநர்கள் முதல் காவல் துறை உயர் அதிகாரிகள் வரை ஒவ்வொருவரும் கடமை மற்றும் பொறுப்புணர்ச்சியுடன் அவர்களின் பணியில் ஈடுபட்டு, சரியான நுண்ணறிவுத் தகவல்களைப் பெற்று, எந்த ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையும் ஏற்படா வண்ணம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

காவல் துறை சிறப்பாகச் செயல்பட, குற்றத் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதோடு, குற்ற வாளிகளைக் கைது செய்து விரைவில் நீதி பெற்றுத் தருவதிலும் பெரும் கவனம் செலுத்த வேண்டும்.

இறுதியாக, நமது மாநிலம் தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழவும், தொழில் வளம் மிகுந்த மாநிலமாக, மேலும் வளர்ச்சி பெற, குற்ற நிகழ்வு களை பெரிதும் குறைத்திடவும், தடுத்திடவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று உங்கள் அனைவரையும் கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோட், தாம்பரம் மாநகர காவல் ஆணையர் முனைவர் அ. அமல்ராஜ், ஆவடி மாநகர காவல் ஆணையர் கி. சங்கர், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சுவார்த்தையில் உடன்பாடு!

## செவிலியர்கள் உண்ணாவிரதம் வாபஸ்!

சென்னை, செப். 28 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை சமூகமாக முடிந்து செவிலியர்கள் உண்ணாவிரதத்தை முடித்தக் கொண்டனர்.

நேற்று முன்தினம் 26.09.2023 மாலை கோவிட் 19 காலத்தில் பணிபுரிந்த செவிலியர்கள் உண்ணாவிரதத்தில் இருந்தவர்களை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இப்பேச்சு வார்த்தை ஏற்றுக் கொண்டதன் முடிவில் இதற்காக இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைத்து மருத்துவ பணியாளர் தேர்வாணையம் மூலமாக சான்றிதழ் சரிபார்க்கும் பணி மற்றும் இனசுழற்சி முறையும், முதுநிலை முறையை பின்பற்றியும், சரிபார்க்க அறிவுறுத்தியுள்ளார்.

அமைச்சர் தலைமையில் பேச்சுவார்த்தை நடந்த போது இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மற்றும் கூடுதல் இயக்குநர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் ஆகியோரும் மற்றும் உதயகுமார் தலைமையில் எம்.ஆர்.பி. செவிலியர்கள் சங்க உறுப்பினர்கள் 5 பேரும் கலந்துக் கொண்டனர். விரைவில் இவர்களை பணியமர்த்துவதற்கு உடனடியாக ஆவனம் செய்யுமாறு மக்கள் மற்றும் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இப்பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துக் கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் நல்லுறவு மைய கூட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் (DISHA) குழுத்தலைவர் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு தலைமையிலும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையிலும் நடைபெற்றது. அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், எஸ்.ஆர்.ராஜா, சி.வி.எம்.பி.எழிலரசன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## பணமாகப் பெறப்பட மாட்டாது:

# குடிநீர்க் கட்டணம் இ-சேவை மூலம் செலுத்த வேண்டும்!

## சென்னைக் குடிநீர் வாரியம் அறிவிப்பு!

*சென்னை, செப்.28-*

*01.10.2023 முதல் சென்னை குடிநீர் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை இ-சேவை மையங்கள் மற்றும் டிஜிட்டல்/ காசோலை/ வரைவோலைகளாக மட்டுமே செலுத்திட வேண்டும். ரொக்கமாக பெறப்பட மாட்டாது என சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது.*

*சென்னை குடிநீர் வாரியத்திற்கு நுகர்வோர்கள் செலுத்த வேண்டிய குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி, குடிநீர் கட்டணங்கள், இணைப்புக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களை 01.10.2023 முதல் இ-சேவை மையங்கள் மற்றும் டிஜிட்டல்/ காசோலை/ வரைவோலைகளாக மட்டுமே செலுத்திட வேண்டும். ரொக்கமாக பெறப்பட மாட்டாது.*

*அனைத்து பகுதி அலுவலகங்களில் செயல்பட்டுவரும் வசூல் மையங்கள் வழக்கம் போல் இயங்கும். மேலும், பணிமனை அலுவலகங்களில் தற்போது செயல்பட்டுவரும் வசூல் மையங்கள் 01.10.2023 முதல் செயல்படாது. டிஜிட்டல் கட்டண முறையை ஊக்குவிப்பதற்காகவும், வரிசையில் காத்திருப்பதைத் தவிர்ப்பதற்காகவும் சென்னை குடிநீர் வாரியம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.*

*இந்நிலையில், சென்னை குடிநீர் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை காசோலை (Cheque) மற்றும் வரைவோலைகளாக (Demand Draft) செலுத்தும் நுகர்வோர்களின் வசதிக்காக அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் பணிமனை அலுவலகங்களில் காசோலை / வரைவோலை பெறுவதற்கான பெட்டிகள் வைக்கப் பட்டுள்ளது.*

*மேலும், நுகர்வோர்கள், தங்கள் பகுதிகளில் உள்ள இ-சேவை மையங்களில் குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை செலுத்த சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது.*

*நுகர்வோர்கள் சென்னை குடிநீர் வாரியத்தின் கட்டண நுழைவாயிலைப் (online Gate Way) பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக பணம் செலுத்தலாம். UPI, QR குறியீடு மற்றும் PoS போன்ற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி, குடிநீர் கட்டணங்களை செலுத்தலாம்.*



நேற்று முன்தினம் (26.09.2023) சென்னை, அண்ணாசாலையில் உள்ள தேவநேய பாவாணர் மாவட்ட மைய நூலகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு மேற்கொண்டார்.உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை ந.அருள் உடனிருந்தார்.